மாதிரி வினாத்தாள் - 2019-20

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

அறவியலும் இந்தியப் பண்பாடும்

நேரம் : 15 நிமிடங்கள் + 2.30 மணி    மொத்த மதிப்பெண்கள் : 70

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும். படங்கள் வரைவதற்குப் பென்சில் பயன்படுத்தவும்

## பகுதி – அ

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.    20×1=20

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "பழங்காலப் பண்பாட்டின் எச்சம், நாட்டுப்புறவியல்" என்று கூறியவர்

அ) சு. சக்திவேல்    ஆ) வில்லியம் ஜான் தாமசு

இ) ரூத் பெனிடிக்ட்    ஈ) மாலினோசுக்கி

2. ஆகம சித்தாந்தங்கள் என்றழைக்கப்படுபவை

அ) சமண நூல்கள்    ஆ) பௌத்த நூல்கள்

இ) இஸ்லாமிய நூல்கள்    ஈ) ஜொராஷ்டிரிய நூல்கள்

3. பொருத்துக.

அ) பஞ்சாப் - 1) ஓணம்

ஆ) தமிழ்நாடு - 2) போஹாலி பிஹீ

இ) கேரளா - 3) பைசாகி

ஈ) அஸ்ஸாம் - 4) பொங்கல்

அ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

ஆ ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

இ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1

ஈ ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4

4. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – 1 : பீடபூமிகள் என்பவை மழை குறைந்த உயர்நிலங்களாகும்.

கூற்று – 2 : கனிமவளங்களும் சில வேளாண்பொருள்களும் இப்பகுதியில் விளைகின்றன.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ) கூற்று 1, 2 சரியானவை

ஈ ) கூற்று 1, 2 தவறானவை

5. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணை எது?

அ) சபா - மூத்தோர் அவை

ஆ) சமிதி - சமய விவாத அவை

இ) விதாதா - மக்கள் பிரதிநிதிகளின் அவை

ஈ) சேனானி - இளவரசர்

6. இராமாயணத்தை இராமசரிதமானஸ் என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்த்தவர்

அ) துக்காராம் ஆ) மீராபாய் இ) துளசிதாசர் ஈ) நாமதேவர்

7. மந்திரங்களின் அரசி எனப்படுவது

அ) காயத்திரி மந்திரம்

ஆ) யஜுர்வேத மந்திரம்

இ) உபநிடதம்

ஈ) சம்ஹிதைகள்

8. சரியாகப் பொருத்தப்பட்ட விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

அ) பௌத்தம் - ஆதிகிரந்தம்

ஆ) இஸ்லாம் - திருக்குரான்

இ) சமணம் - திரிபீடகம்

ஈ) ஜொராஸ்டிரியம் - ஜெண்ட் அவஸ்தா

அ) 1, 2 சரியானவை

ஆ) 2, 3 சரியானவை

இ) 2, 4 சரியானவை

ஈ) 1, 4 சரியானவை

9. குப்தர் காலத்தில் முக்கிய வணிக மையமாக விளங்கிய இடங்களுள் ஒன்று

அ) பிரயாகை ஆ) புரோச் இ) காம்போ ஈ) தாமிரலிப்தி

10. பீரங்கியை இந்தியாவில் முதன்முதலில் அறிமுகப்படுத்திய முகலாய மன்னர்

அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) அக்பர் ஈ) ஜகாங்கீர்

11. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) மத்துவர் – வதவாலி ஆ) ஞானேஷ்வர் – ஞானேஸ்வரி

இ) ஜெயதீர்த்தர் – வேதாந்த சங்கிரகம் ஈ) இராமனுஜர் - சர்வமூலம்

12. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – இறைவன் அருளால் திண்ணப்பன், கண்ணப்பராக மாறினார்.

காரணம் – சிவபெருமான் கண்ணில் ஏற்பட்ட பழுதை நீங்குவதற்காகத் தம் கண்களை அப்பியதால், கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

இ) கூற்று , காரணம் இரண்டும் சரி. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

13. சத்திய ஜோதக் சமாஜம் என்ற அமைப்பை நிறுவியவர்

அ) அயோத்திதாசப் பண்டிதர் ஆ) கந்துகூரி வீரசேலிங்கம்

இ) ஜோதிபாபூலே ஈ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

14. இந்தியா இந்தியருக்கே என்று முழங்கியவர்

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரசுவதி

இ) இராஜாராம் மோகன்ராய் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

15. கொடுக்கப்பட்டவற்றிற்குச் சரியான பொருத்தத்தைத் தேர்ந்தெடுக்க.

அ) அஹிம்சை – 1) பொருள் சேர்க்காமை

ஆ) சத்தியம் - 2) திருடாமை

இ) அஸ்தேயம் - 3) உண்மை

ஈ) அபரிக்ரஹம் - 4) வன்முறை இல்லாமை

அ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1
ஆ) அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 4
இ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3
ஈ) அ – 1, ஆ – 4, இ – 3, ஈ – 2

16. ஏர்வடிவில் உடலை நிறுத்தும் ஆசனம்
அ) சலபாசனம்
ஆ) பவள முத்தாசனம்
இ) ஹாலாசனம்
ஈ) பாதஹஸ்தாசனம்

17. ஆய்காஸ் என்பது எந்த மொழிச் சொல்?
அ) இலத்தீன் ஆ) பிரெஞ்சு இ) கிரேக்கம் ஈ) ஸ்பானிஷ்

18. 'உலகச் சுற்றுச் சூழல் தினம்' அனுசரிக்கப்படும் நாள்
அ) ஜூன் 5
ஆ) ஜூலை 6
இ) ஆகஸ்டு 15
ஈ) செப்டம்பர் 21

19. இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர் எனக் குறிப்பிடப்படுவது
அ) கலை ஆ) ஆன்மிகம் இ) யோகா ஈ) மருத்துவம்

20. விடுபட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) சரகர் – சரகசம்ஹிதா
2) சுசுருதர் - சுசுருதசம்ஹிதா
3) அக்னிவேசர் – அக்னிவேச தச்திரா
4) வாக்பட்டர் - ?
அ) ஆயுர்வேதம் ஆ) அஷ்டாங்கஹிருதயா இ) இரசவாதமுறை ஈ) யுனானி

## பகுதி - ஆ

பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு 20 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.

வினா எண் 24 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7X 2 = 14

21. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளைக் குறிப்பிடுக.

22. இந்தியாவைத் தீபகற்ப நாடு என அழைக்கக் காரணம் என்ன?

23. விதுரநீதி கூறும் அறக்கருத்துகள் யாவை?

24. அறுவகைச் சமயங்கள் யாவை?

25. சல்லேகனம் என்றால் என்ன?

26. வடதளி பூசை என்றால் என்ன?

27. சமூக முன்னேற்றத்திற்கு அயோத்திதாசர் ஆற்றிய பணிகள் யாவை?

28. யோகாவின் பிரிவுகள் யாவை?

29. சிப்கோ இயக்கம் எந்தெந்த மாநிலங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது?

30. பதினெண் சித்தர்களுள் நால்வர் பெயரைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு 30 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.

வினா எண் 40 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7 X 3 = 21

31. இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகள் யாவை?
32. இந்தியாவைப் “பல இனங்களின் அருங்காட்சியகம்“ எனக் கூறக் காரணம் என்ன?
33. முன்வேதகால அரசமைப்பு, ஆட்சிமுறை குறித்து நீவிர் அறிவன யாவை?
34. இந்தியப் பண்பாட்டிற்குச் சீக்கிய சமயம் அளித்த கொடைகளைக் குறிப்பிடுக.
35. குடவோலை முறை என்றால் என்ன?
36. சூபியிஸத்தின் முதன்மைக் கொள்கைகள் யாவை?
37. ஆரிய சமாஜத்தின் கட்டளைகள் யாவை?
38. பிராணாயாமத்தின் நோக்கம் யாது?
39. சுற்றுச்சூழல் கல்வியின் தேவையைக் குறிப்பிடுக.
40. பஞ்சசீலக் கொள்கை – குறிப்பு வரைக.

## பகுதி - ஈ

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் 50 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.

7 X 5 = 35

41. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகள் யாவை? அவற்றுள் எவையேனும் இரண்டை விளக்குக.

(அல்லது)

இந்தியப் பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கத் துணைபுரியும் காரணிகள் யாவை? விளக்குக.

42. உபநிடதங்கள் பற்றி விவரித்து எழுதுக.

(அல்லது)

கிறித்துவ சமயத் தொண்டு நிறுவனங்களின் பணிகள் யாவை?

43. பௌத்த சமயத்தின் இரு பிரிவுகளான மகாயானத்திற்கும் ஹீனயானத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

(அல்லது)

இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடைகள் யாவை?

44. பல்லவர் காலக் கலை, கட்டடக்கலை குறித்து எழுதுக.

(அல்லது)

குப்தர்கள் காலம் இந்திய வரலாற்றில் செவ்வியல் காலம் என்றழைக்கப்படுவது ஏன்?

45. நாதயோகாவின் பயன்கள் யாவை?

(அல்லது)

பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை?

46. பிரம்ம சமாஜத்தின் சமூகத் தொண்டுகள் யாவை?

(அல்லது)

எவையேனும் ஐந்து ஆசனங்கள் செய்யும் முறைகளை எழுதுக.

47. இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?

(அல்லது)

இந்திய மருத்துவம் உலகிற்கு அளித்த கொடைகளைப் பட்டியலிடுக.

(K. Srinivasan)
14.8.19

19/8/2019